**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**

**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**

## SC.No.20/2020 - PW-5

| | |
|---|---|
| Name | திரு.ரஞ்சித் |
| Father Name | விநாயகம் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.12.2024.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், முப்பதுவெட்டி, காலஸ்திரியன் பேட்டை தெருவில் வசிக்கிறேன். நான் டீக்கடை வைத்துள்ளேன். அ.சா.1,2,3 தெரியும். அ.சா.4 என் அண்ணன் ஆவார். வழக்கில் இறந்த நடராஜனை தெரியும். நடராஜன் மகன்தான் அ.சா.1 ஆவார். ஆஜர் எதிரிகள் 7 பேரையும் எனக்கு தெரியும். எதிரிகள் 7 பேரும் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். 02.03.2014 ம் தேதி 2 மணிக்கு முப்பதுவெட்டி பஸ்டாப்பிங் டர்னிங்கில் உள்ள என்னுடைய டீக்கடையை ஞாயிற்றுக்கிழமை என்பதால், மூடுவதற்காக ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தேன். அன்றைய தினம் எங்கள் ஊர் பள்ளியில் தமிழக அரசு விலையில்லா மிக்சி, கிரைண்டர் வழங்கி கொண்டிருந்தார்கள். அங்கு அ.சா.3 மணிகண்டனுக்கும், சிலம்பரசனுக்கும் சண்டை நடந்ததாக எங்கள் ஊர் நாட்டாமை நடராஜன், ராஜேந்திரன் ஆகியோரிடம் சொன்னார்கள். அப்போது சிலம்பரசனும்,

பாஸ்கரனும் இரும்பு ராடால் நடராஜனையும், ராஜேந்திரனையும் தலை மீது அடித்தார்கள். பிரேமும், கண்ணனும் கொம்பால் நடராஜனையும், ராஜேந்திரனையும் தலை மீதும், முதுகின் மீதும் அடித்தார்கள். கபிலன், விக்னேஷ், சரத் ஆகியோர்கள் நடராஜனையும், ராஜேந்திரனையும் கையால் வயிற்றிலும், முதுகிலும் தாக்கினார்கள். அடிப்பட்ட மணிகண்டன் முன்பே மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். பிறகு, நடராஜனும், ராஜேந்திரனும் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். அவர்களை யார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அதன் பிறகு நடராஜன் இறந்துவிட்டார். வேலூர், நீதித்துறை நடுவர் 3 நீதிமன்றத்தில் நான் வாக்குமுலம் அளித்தேன். கு.வி.மு.ச பிரிவு 164 ன் கீழ் நான் அளித்த வாக்குமூலம் தான் **அ.சா.ஆ.6** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**S/d. M.Selvam,**
**I Additional District Judge,**
**Ranipet.**